மின்னிதழ்
மார்ச் 2026





# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்



## செயலர் பக்கம்

அருள்பணி சு. மரிய ஆசை

அன்பு உறவுகளே !



விவிலியத்தில் இவர் பேசியதாக எந்தவொரு வசனமும் இல்லை. தன்னுடைய விருப்பு வெறுப்புகளைக் கடந்து, இறைவனது விருப்பத்தை நிறைவேற்றி வாழ்ந்தவர் இவர். ஆர்ப்பாட்டமும், ஆரவாரமும் இவரது வாழ்வில் துளியும் இல்லை. சப்தங்களின்றி சாதனைகள் பலவற்றைப் படைத்தவர் இவர். ஆம், அவர்தான் **புனித யோசேப்பு.**

புனித யோசேப்பு விவிலியத்தில் எதுவும் பேசவில்லை. ஆனால் இவரைப் பற்றி நாம் பேசுகிறோம். அதுவே இவருடைய தனிச் சிறப்பு. வார்த்தைகளின் வசீகரத்தைவிட மௌனத்தின் வசீகரம் அலாதியானது, அற்புதமானது. வார்த்தைகள் இல்லாமல் மௌனத்தால்கூட மாபெரும் புரட்சிகரமான வாழ்வு வாழ முடியும் என்பதற்கு புனித யோசேப்பே நமக்கு எடுத்துக்காட்டு. நற்செய்தி நூல்களில் இவருடைய மௌனம் நம்மை வியக்க வைக்கிறது. இயேசுவையும் மரியாவையும் சந்தித்த பலர் பேசுவதற்குத் தூண்டப்பட்டார்கள். குறிப்பாக, கருவுற்ற மரியா அருகில் வந்தபோது எலிசபெத் மகிழ்ச்சியால் நிறைந்து வாழ்த்தினார். கோவிலில் குழந்தை இயேசுவைப் கையிலேந்தி சிமியோன் கடவுளைப் புகழ்ந்தார். இவ்வாறு பலர் பேசியதாக நற்செய்தியில் குறிப்புகள் இருந்தும், புனித யோசேப்பு பேசிய வசனமாக எதுவும் இல்லை என்பது உண்மையில் ஆச்சரியமளிக்கிறது.

புனித யோசேப்பின் மௌனமானது, வேறு எவருடைய பதிவு செய்யப்பட்ட எந்த வார்த்தைகளையும் விட மிகச் சத்தமாக பேசுகிறது. அவர் வார்த்தையில் பேசுவதை விட மிகப் பெரிதான ஒன்றைச் செய்தார்: ஆம், அவர் கடவுள் தனக்கு கொடுத்த பணியைச் செய்து முடிப்பதில் மிகக் கருத்தாய் இருந்தார். சொல் வீரராக அல்ல, செயல் வீரராகவே நற்செய்தி புனித யோசேப்பை அடையாளப்படுத்துகிறது.

யோசேப்பு ‘செய்ததை’ பற்றி மட்டுமே நற்செய்தி நூல்கள் பேசுகின்றன. உண்மையில், சொற்களைவிட செயல்களே அதிக வலிமையும், வல்லமையும் உடையவை. சத்தத்தால் நிரம்பிய நமது நவீன உலகில், மௌனம் செயலற்றதாக அல்லது பலவீனமாக பார்க்கப்படுகிறது. ஆனால் புனித யோசப்பு மௌனத்தின் வலிமையை நமக்குக் காட்டுகிறார். கடவுளின் குரல் மட்டுமே தம் வாழ்வில் எஞ்சியிருக்குமாறு, அவர் தனது சொந்த குரலை அமைதிப்படுத்தினார். புனித யோசேப்பைப் போல நாமும் நம் சொந்தக் குரலை அடக்கினால், கடவுளின் அமைதியான தூண்டுதல்களைக் கேட்கலாம். அவருடைய இறைத்திட்டத்தில் நாமும் செயல் வீரர்களாகலாம். ஆகவே, மார்ச் 19 ஆம் தேதி அவரைக் கொண்டாடும் வேளையில் நம் மௌனமும் உரக்கப் பேசட்டும்!

## இயேசுவின் பாடுகள் மருத்துவக் கோணத்தில்

ஒவ்வொரு வருடமும் நமது திருவழிபாட்டு ஆண்டில் தவக்காலம் வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் நாம் பல தவ முயற்சிகளை மேற்கொள்கிறோம். அதனோடு சேர்த்து இயேசுவின் பாடுகளைச் சற்று ஆழமாக தியானிப்போம். மருத்துவ ரீதியாக ஆராய்ந்து பாடுகளின் உச்சக் கட்ட கோரத்தை நாம் உணருவோம்.

இயேசு முழுமையாக இறை இயல்பையும் மனித இயல்பையும் கொண்டிருந்தார். தான் உலகின் பாவங்களை போக்கும் செம்மறி என்று அறிந்திருந்தாலும், தன் மனித இயல்பில் ஒவ்வொரு முறையும் தன் சாவை அறிவிக்கும் போது உள்ளம் கலக்கமுற்றார் (யோவான் 12:27). இம்மனப் போராட்டங்கள் அவரது நேரம் நெருங்கி வர வர மிகுதியாயிற்று.

இறுதி உணவின்போது, தன்னோடு உணவு அருந்தும் யூதாசு இஸ்காரியோத்து தன்னை காட்டி கொடுக்கப்போவதை அறிந்ததால் உள்ளம் கலக்கமுற்றார் (யோவான் 13:21). அந்த மனவேதனை மற்றும் உளவியல் அழுத்தம் மிகவும் தீவிரமாக இருந்தது என்று சிலர் கருதுகிறார்கள். இதை "crepacuore" அதாவது "இதயம் உடைதல்" என்று கூறுகிறார்கள். இதய தசை திடீரென தற்காலிகமாக பலவீனப்படுகிறது (stress induced cardio myopathy). இதைப்பற்றி விவிலியத்தில் நேரடியாக நாம் காண இயலாது.

அதை தொடர்ந்து அன்று இரவு கெத்சமனி தோட்டத்தில் மிகுதியான மன வேதனையுற்றார். இவ்வேதனைகளை நாம் நற்செய்தியில் காணலாம். குறிப்பாக மருத்துவம் தெரிந்த லூக்கா எழுதிய நற்செய்தியில் இயேசுவின் வியர்வை பெரும் இரத்த துளிகளாக தரையில் விழுந்தன என்ற குறிப்பை நாம் காணலாம் (லூக் 22:14). இங்கு உருவக அணியை பயன்படுத்துகிறார் என்று சிலர் கூறுகின்றனர்.

ஆனால் இங்கு கூறப்படும் இந்நிகழ்வு உருவக அணி அல்ல மாறாக உண்மையாக நடந்தேறிய நிகழ்வு. இதை மருத்துவர்கள் ஹெமாட்டோட்ரோசிஸ் (Hematohidrosis) என்று அழைக்கின்றனர். இரத்த வியர்வை என்றும் அழைக்கப்படுகின்றது. இது தீவிரமான நரம்பியல் - தன்னியக்க (neurovegetative /autonomic) தூண்டுதலால் உருவாகிறது. இந்த அரிதான உடல் நிலை மிகவும் கடுமையான மன அழுதத்தின் காரணமாக, வெளிவந்த இரசாயனங்கள் வியர்வைச் சுரப்பிகளில் உள்ள நுண்ணிய இரத்த நாளங்கள் வெடித்து, வியர்வையுடன் இரத்தம் கலந்தபடி வெளிவரும். இது எந்த இடத்தில் ஏற்படுகிறதோ அந்த இடத்திலுள்ள தோல் மிகவும் மென்மையாகவும் மிகுந்த உணர்திறன் கொண்டதுமாகவும் மாறும். இந்நிலை பின்வரும் பாடுகளை மேலும் மோசமடையச் செய்தது. இது அறிவியல் ரீதியாக பதிவு செய்யப்பட்ட ஒன்று.

இந்த அரிதான உடல்நிலை இயேசு கடுமையான மனவேதனையில் இருந்ததைக் காட்டுகிறது. உடல் வேதனை அனுபவிக்கும் முன்பே மனவேதனையால் உடல்நிலை பலவீனமடைந்ததையும் அதனால் நீர்ச்சத்து குறைந்ததாகவும் கருதப்படுகிறது. இந்த மனத்துயருக்கு காரணம் மனித இயல்பில் மட்டும், தாம் எதிர்கொள்ளவிருக்கும் பாடுகளை எண்ணியதால். கடவுளுடன் கொண்டிருந்த உறவிலிருந்து பிரிக்கப்பட்டதை உணர்ந்ததால்.

தன்னையே பலியாக்க வந்த மானிடமகன் மனித இயல்பில், தன் துன்பங்களை அகற்றிவிட தந்தையிடம் மன்றாடினார். அந்த அளவுக்கு அவரது உள்ளம் அழுத்தத்திலிருந்தது. அந்த ஒரு மனநிலையிலும் கடவுளின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்தார். நமக்காக நம் பாவங்களுக்காக, இரத்தம் கலந்த வியர்வை மண்ணில் வந்து விழும் அளவுக்கு மன அழுத்தம் இயேசுவை ஆட்கொண்டது.

இரவு கெத்சமனியில் கைது செய்யப்பட்டபின் அவசரமாக தலைமை குரு, அன்னாவின் இல்லத்தில் விசாரிக்கப்படுகிறார். சாதாரணமாக அவரைக் கைது செய்யவில்லை. அவருடைய இரு கைகளையும் முதுகுக்கு பின்னால் வைத்து கட்டி அவரை கொண்டுசெல்கின்றனர் (யோவான் 18:12). இச்செயல் அவரை நிலைதடுமாறச் செய்கின்றது. யூத சட்ட முறைமைப்படி ஒரு கைதியை நள்ளிரவில் விசாரிக்க கூடாது. ஆனால் அனைத்தும் மாறுபட்டு நடந்தன.

தலைமை குரு அன்னாவிடம் இருக்கும்போது முகத்தில் அறைந்தனர் (யோவான் 18:22). பின் கயபாவிடம் இழுத்துச் செல்லப்பட்டார் (யோவான் 18:24). பின் பிலாத்துவிடம் ; பிலாத்து ஏரோதுவிடம்; ஏரோது மறுபடியும் பிலாத்துவிடம். எக்குற்றம் இல்லாத மானிட மகன் நமக்காக படைவீரர்களிடம் அவமானப் படுகின்றார்.

“அடிப்பதற்கு இழுத்துச்செல்லப்பட்ட ஆட்டுக்குட்டிபோலும் உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர் தம் வாயை திறவாதிருந்தார் " -எசாயா 53:7

பிலாத்து அவரை விடுவிக்க வழிதேடினான். இயலவில்லை.கற்றூணில் கட்டி சாட்டையால் அடிக்க ஆணையிட்டான். உரோமையர்கள் பயன்படுத்திய சாட்டை நாம் இன்று பயன்படுத்தும் சாட்டை போன்ற வடிவமல்ல. மாறாக அது பல தோல் கயிறுகள் ஒன்றாக சேர்த்து கட்டப்பட்டதாக இருக்கும். ஒவ்வொரு தோல் கயிறுகளிலும் கூரான எலும்புகள் மற்றும் உலோகத் துண்டுகள் இருக்கும். இச்சாட்டையால் அடிக்கும்போது இப்போதுள்ள சாட்டைப்போல் சுற்றியுள்ள திசுக்களுக்கு அதிக சேதம் இல்லாமல் நேரான தெளிவான காயங்களை அது கொடுக்காது.



The scourge itself, also known as a *flagrum*, or *flagellum*, was a whip with leather thongs containing small metal balls and sharp animal bone fragments.

மாறாக அதில் இருக்கும் கூர்மையான எலும்பு மற்றும் உலோகங்கள் ஆழமாக போய் சதை பகுதியை பற்றிக்கொள்ளும். அடிக்கின்ற படைவீரன் வீசிய வேகத்தில் அதை இழுக்கும்போது அதோடு சேர்ந்து சதையும் கிழிந்து வரும். இவ்வாறு பல அடிகளுக்கு பிறகு முதுகு பகுதியில் உள்ள கிழிவுகளினால் உடலின் அடிப்பகுதியில் உள்ள எலும்புக்கூடு (Spine & rib cage) தெரியும்.

தசைகளுக்குள் ஆழமாக கிழிவுகள் ஏற்பட்டு இரத்தம் சொட்டி துடித்து கொண்டிருக்கும் தசைத் துண்டுகளை உருவாக்கும். நரம்புகள் வெளிப்படையாக தெரியும். தசைகள், தசைநார்கள் மற்றும் உட்பகுதி உறுப்புகள் வெளியே தெரியும் அளவுக்கு சாட்டை அடிகள் இருக்கும். தோள், முதுகு, இடுப்பு மற்றும் தொடைகளின் மேல் பகுதி வரை இவ்வாறு நேரிடும். ஒரு மனிதன் இறக்கும் அளவுக்கு அடிகளின் கோரத் தன்மை இருக்கும். இறக்காவிட்டாலும் கண்டிப்பாக ஹைபோவோலேமிக் அதிர்ச்சி (hypovolemic shock) அந்த மனிதருக்கு ஏற்படும். இயேசுவுக்கும் ஏற்பட்டது.

Hypovolemic shock என்பது உடலில் உள்ள இரத்தம் அல்லது திரவ அளவு மிகவும் குறைவதால் ஏற்படும் ஆபத்தான நிலை. அந்த மனிதரின் உடலில் பின்வரும் நிகழ்வுகள் நடைபெறும்.




(i) இதயம் வேகமாக துடிக்கும் - இல்லாத இரத்தத்தை பம்ப் செய்ய முயற்சிப்பதால் இதயத் துடிப்பு அதிகரிக்கும்.

(ii) இரத்த அழுத்தம் குறைகிறது - இதனால் மயக்கம் அல்லது சரிந்து விழுதல் ஏற்படலாம்

(iii) சிறுநீரகங்கள் சிறுநீர் உற்பத்தியை நிறுத்துகின்றன - உடலில் மீதமுள்ள திரவ அளவை பாதுகாக்க உடல் முயற்சிக்கும்.

(iv) அதிக தாகம் ஏற்படும் - இழந்த இரத்த/ திரவ அளவை ஈடு செய்ய உடல் திரவங்களை விரும்புகிறது.

இயேசு இவை அனைத்தையும் அனுபவித்தார். அடிப்பட்ட இயேசுவின் உடல்நிலை மிகக் கவலைக்கிடமாக இருந்தது.



இதன்பின் அவருக்கு செந்நிற ஆடை அணிவித்தனர். முள்முடி சூட்டினர். படங்களில் காணப்படுவது போல் வட்ட வடிவ முள்முடி அல்ல, மாறாக ஒரு தொப்பியை போன்று முள்முடி வடிவமைகப்பட்டது. மீண்டும் அதிக அளவில் இரத்தப் போக்கு ஏற்படுகிறது. ஏனென்றால் தலையின் தோல் (SCALP), உடலின் மிக அதிக இரத்த நாளங்கள் கொண்ட பகுதிகளில் ஒன்றாகும். படைவீரர்கள் ஒவ்வொரு முறையும் அவரை அடித்தபோது, அவை அவரது தலையின் தோலில் ஆழமாக குத்தின. தலைமுடி எல்லாம் இரத்தத்தால் நனைந்து ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொண்டது. முள்முடி சூட்டி அவரை அடித்து ஏளனப் படுத்தியபின் அவர்கள் அணிவித்த செந்நிற உடையை கழற்றுகின்றனர்.



இரத்தம் உறைந்து துணியில் பிடித்துக்கொண்டிருந்த காயங்கள் மறுபடியும் உடையை கழற்றுவதால் திறக்கப்படுகின்றன. இவ்வாறு மேலும் மேலும் இயேசு இரத்தம் சிந்துகிறார். இதனால் Hypovolemic Shock இன்னும் அதிகரிக்கின்றது. தசைகளுக்கும், தோல்களுக்கும் இரத்தம் எடுத்துச் செல்லும் இரத்த நாளங்கள் சுருங்குகின்றன. ஏனென்றால் முக்கிய உறுப்புகளுக்கு அதாவது மூளை, இதயம், நுரையீரல், சிறுநீரகம் இவைகளுக்கு செல்லும் இரத்த அளவு குறைவுபடாமல் இருப்பதற்காக தான். உடல் முழுவதும் மன அழுத்தக் காடிகோலமின்கள் (stress catecholamines) அதிகமாக வெளியேறி, அவர் பலவீனமாகவும் நடுங்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்.

Stress catecholamines என்பது உடலில் மன அழுத்தம், பயம், அதிர்ச்சி அல்லது ஆபத்து ஏற்பட்டால் வெளியேறும் ஹார்மோன்கள் (hormones) ஆகும். இவை உடலை "போராடு அல்லது ஓடு" (fight or flight) நிலைக்கு தயாராக்கும். அது அவசர கால ஹார்மோன்கள். குறுகிய காலத்திற்கு பயனுள்ளதாக இருக்கும். அதிகமாக (அ) நீண்ட நேரம் இருந்தால் உடலுக்கு நடுக்கம், பலவீனம் போன்ற பல தீங்குகளை விளைவிக்கும்.


உடல் அணுக்கள் சரியாக செயல்பட தேவையான அத்தியாவசிய ஆக்சிசன் மற்றும் ஊட்டச்சத்துகள் இல்லாமல் வாடுகின்றன. அவருடைய உடல் மெட்டபாலிக் அசிடோசிஸ் (metabolic) acidosis) நிலைக்குள் தள்ளப்படுகிறது. சாதாரணமாக இரத்தத்தின pH சுமார் 7.35-7.45 இருப்பதை விட pH 7.35 கீழ் குறைந்தால் அதை metabolic acidosis என்கிறோம். இது உடலில் அமிலம் அதிகரித்து இரத்தம் மிகவும் அமிலத்தன்மை உடையதாக மாறும் ஆபத்தான நிலை.இதனால் மூச்சின் வேகம் அதிகரிக்கும், உடல் சோர்வு, குழப்பம், மயக்கம் ஏற்படும்.

இத்தகைய உடல்நிலையில் தான் அவர்மீது சிலுவை சுமத்தப்படுகிறது. உரோமையர்கள் பயன்படுத்திய சிலுவை “T” வடிவை கொண்ட 'டௌ' (TAU) சிலுவை. இதில் செங்குத்தாக இருக்கும் மரப்பகுதி கல்வாரி மலைமேல் ஊன்றி இருக்கும். அச்சிலுவையின் குறுக்கு மரத்தண்டு (patibulum) சுமந்து செல்லப்படும். இது 34 முதல் 57 கிலோ எடை கொண்டதாகும். முழுச்சிலுவையின் எடை 59 முதல் 136+ கிலோ வரை இருந்திருக்கும். செங்குத்து கம்பம் கல்வாரியில் இருந்தபோதும் இயேசு இருந்த உடல்நிலையில், patibulum சுமை மிகப்பெரியதாக மாறியது. இது மென்மையாக அல்லாமல் கரடுமுரடான(சுரசுரப்பாக) இருக்கும். அது ஏற்கெனவே கோர நிலையில் உள்ள அவரது முதுகு பகுதியின் காயங்களை மேலும் திறக்க வைக்கின்றது.

மிக மோசமான நிலையில் இருக்கும் இயேசுவால் அச்சிலுவையின் பாரத்தை தாங்க இயலவில்லை. மயக்கத்தில் முகம் குப்புற கீழே விழுகிறார். மயங்கி விழுவதால் அவரின் வலது கழுத்து மற்றும் தோள் பகுதியின் மேல் சிலுவை பலமாக விழுந்து பலத்த காயம் அப்பகுதியில் ஏற்படுகிறது. இந்த தாக்கம் தலையை மறுபக்கத்திற்கு இழுத்துச் செல்கின்றது. அப்பகுதியில் உள்ள (c5,c6) நரம்புகள் இழுக்கப்பட்ட நிலைக்கு மாறிவிடுகின்றன. இதனால் அப்பகுதியில் எர்ப் - டச்சென் (Erb-Duchenne paralysis) பக்கவாதம் ஏற்படுகின்றது. இதனால் வலது கை, பக்கத்தில் தொங்கி (waiter's Tip) செயலிழந்து விடுகின்றது.






முதல் முறை விழுந்த இயேசுவுக்கு, மேல் உடலின் வலது பக்கத்தில் பக்கவாதம் ஏற்படுகின்றது. வலது தோள் கீழே தொங்கும், கை செயலிழந்து தொங்கும். இது மட்டுமல்ல கழுத்து தசைகள் சேதமடைந்து stiff neck ஏற்படுகிறது. இதனால்தான் சிலுவையில் தொங்கும்போது அவர் தலை முன் குனிந்து இடது பக்கம் திரும்பிய நிலையில் இறக்கிறார். Sympathetic நரம்பு சேதத்தால் Enophthalmos அதாவது கண் உள்ளே செல்கின்றது. முகங்குப்புற விழுந்ததால் நுரையீரல் மற்றும் இதய காயம் ஏற்படுகின்றது. இதனால் மார்பு உள்ளே இரத்தம் தேங்குகின்றது (Hemothorax). இதனால் தான் சிரேன் ஊராகிய சீமோனின் உதவி இயேசுவுக்கு தேவைப்படுகின்றது.




இந்நேரத்தில் அன்னை மரியாவின் ஆறுதல் இயேசுவுக்கு மிகவும் தேவைப்பட்டது, அவரின் கல்வாரி பயணத்தை தொடர. அவர் கல்வாரிக்கு சென்ற வழி சுமார் 600 முதல் 650 மீட்டர் தொலைவு இருக்கும். ஒர் ஆரோக்கியமான மனிதர் 10-15 நிமிடங்களில் நடந்து முடிக்கலாம். ஆனால் ஆய்வாளர்கள், இயேசு, தன்னுடைய உடல்நிலையின் நிமித்தம் குறைந்தது 30 நிமிடங்கள் முதல் 1 மணி நேரம் வரை ஆகியிருக்கும் என்று கூறுகின்றனர்.

இவ்வாறு அளவிடமுடியாத பாடுகளை அனுபவித்து கல்வாரி மலையை அடைந்தார் இயேசு. அங்கு அவர் காயங்களோடு ஒட்டிக் கொண்டிருக்கும் அவருடைய அங்கியை கழற்றுகின்றனர். மறுபடியும் உறைந்த காயங்கள் திறக்கப்படுகின்றன. ஆடைகளை களைந்து அவமானத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார். அறையப்படுவதற்காக சிலுவையின்மேல் தள்ளப்படுகிறார்.

அவர் கைகளில் எந்த இடத்தில் ஆணிகள் அறையப்பட்டிருக்கும் என்ற விவாதம் ஆய்வாளர்கள் மத்தியில் இருக்கின்றது. பெரும்பாலான ஆய்வாளர்கள் ஆணிகள் அவர் மணிக்கட்டுகளில் தான் அறையப்பட்டிருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். ஏனென்றால் உள்ளங்கையில் அறையப்பட்டிருந்தால் உடல் எடையை தாங்க முடியாமல் கை பிய்ந்து வந்திருக்கும். மணிக்கட்டுகளில் உள்ள எலும்புகள் உடல் எடையைத் தாங்க கூடியதாக இருக்கும்.

அவ்வாறெனில் median நரம்பு பாதிக்கப்பட்டிருக்கும். மிகத் தீவிரமான வலி (Acute neuropathic) விரல்கள் மற்றும் கை முழுவதும் பரவுகிறது. நரம்பு தளர்ச்சி ஏற்படுகிறது. கால்கள் இரண்டும் தனித்தனியே அறையப்பட்டனவா அல்லது ஒன்றின்மேல் ஒன்று அறையப்பட்டனவா என்ற விவாதம் இருக்கின்றது. உடல் எடையை தாங்க குதிகால்களில் ஆணிகள் அறையப்பட்டிருக்க வேண்டும். இது Tibial / plantar நரம்புகளை நேரடியாக பாதிக்கும். இதனால் மிகக் கடுமையான எரியும் வலி ஏற்படுகின்றது. இவ்வாறு ஆணிகளால் அறைப்பப்பட்ட இயேசுவை உயர்த்துகின்றனர். இயேசுவின் முழு உடல் எடை அவருடைய மணிக்கட்டுகளில் விழுகின்றது.

சிலுவையில் தொங்கும் இயேசுவின் தோள்கள் உயர்ந்து, மார்பு நிரந்தரமாக விரிந்த நிலையில் இருக்கின்றது. இந்த நிலையில் அவர் மூச்சை வெளிவிடுவது மிகக்கடினம். ஏனென்றால் Diaphragm தசை இயல்பாக வேலை செய்ய முடியாது. இதனால் போதுமான ஆக்சிஜன் உடலுக்கு செல்லாது. Carbon-di-oxide அதிகரிக்கும். இதனால் கடும் தசை வலி, சோர்வு, இதய துடிப்பு அதிகரிப்பு (arrhythmia), மன குழப்பமும், மூளைக்கு செல்லும் ஆக்சிஜன் குறைந்து, மயக்கம் மற்றும் உணர்வு இழப்பு ஏற்படுகிறது. இதனால் Respiratory acidosis நடக்கிறது.

அவர் மூச்சை வெளிவிட தன்னை உயர்த்த வேண்டும். அப்பொழுது கால்நரம்பு வலி அதிகரிக்கும். அதை ஈடு செய்ய முந்தைய நிலைக்கு செல்ல வேண்டும். ஒவ்வொரு முறையும் அவர் மூச்சு விடும் பொழுது இந்தப் பாடுகளை அனுபவிக்கின்றார். நுரையீரல் செயலிழக்க ஆரம்பிக்கின்றது. அதனால் அதைச் சுற்றி தண்ணீர் (Serous fluid) சேர்கின்றது. இதயத்தை சுற்றியுள்ள pericardium பையிலும் நீர் சேர்ந்தது. இது மேலும் இதயம் சரியாக செயல்படுவதைத் தடுகின்றது. இவ்வாறாக 3 மணி நேரம் சிலுவையில் பாடுகளை அனுபவிக்கின்றார். நிலைமை மோசமடைந்து இயேசு சிலுவையில் உயிர் துறக்கின்றார்.

இதயத்தைச் சுற்றி தெளிந்த திரவம் சேர்ந்ததால்தான் படைவீரர் இயேசுவை ஈட்டியால் குத்தியபோது தெளிந்த திரவமும் அதன்பின் இரத்தமும் வெளிவருகின்றன.

இப்பாடுகள் அனைத்தையும் அன்னை மரியாவும் கண்டார். கடுந்துயருக்கு ஆளானார். நாமும் இப்பாடுகளை தியானிக்கும் போது, அவை நமக்காக நம்மீது அவர் கொண்ட அன்பினால் என்பதை உணர்ந்து இறை வழியில் நடப்போம்.

## விடுமுறை விவிலியப் பள்ளி மாநில பயிற்சிப் பாசறை

பிப்ரவரி மாதம் 7, 8 ஆகிய இரு நாள்கள் திண்டிவனத்தில் தமிழக விவிலியப் பணிக்குழு நடத்திய விடுமுறை விவிலியப் பள்ளி (VBS) கருத்தூட்டுனர்களுக்கான இரு நாள் மாநிலப் பயிற்சிப் பாசறையில் நம் மறைமாவட்டத்திலிருந்து 4 நபர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.



தமிழக திருவிவிலிய அருள்பணிக்குழு திண்டிவனம், முப்பணி மையத்தில் பிப்ரவரி 07,08 ஆகிய நாள்களில் நடத்திய விடுமுறை விவிலியப் பள்ளி வழிநடத்துநர்களுக்கான பயிற்சியில் 91 பேர் பங்கேற்றனர்.

ஒசூர், சீயோன் மையத்தில் பிப்ரவரி 14, 15 ஆகிய நாள்களில் நடத்திய விடுமுறை விவிலியப் பள்ளி வழிநடத்துநர்களுக்கான பயிற்சியில் 34 பேர் பங்கேற்றனர்.

# பள்ளி மறைக்கல்வி நன்னெறிக்கல்வி பொதுத் தேர்வும் சிறப்புத் தேர்வும்

2025-2026 ஆம் கல்வி ஆண்டுக்கான பள்ளி மறைக்கல்வி நன்னெறிக்கல்விக்கான பொதுத் தேர்வு 05.02.2026 வியாழன் அன்று. 4 முதல் 8 ஆம் வகுப்புவரை படிக்கும் மாணக்கருக்கு பள்ளி அளவில் நடைபெற்றது. இதில் தேர்வாகி முதல் இரண்டு இடங்களைப் பிடித்த மாணாக்கருக்கான மறைமாவட்ட அளவில் நடைபெறும் சிறப்புத் தேர்வானது 12.02.2026 வியாழன் அன்று 4 மற்றும் 5 ஆம் வகுப்பு மாணாக்கருக்கும். 13.02.2026 வெள்ளி அன்று 6.7.8 ஆம் வகுப்பு மாணாக்கருக்கும் நடைபெற்றது.

12 ஆம் தேதி திருச்சி நல்லாயன் நிலையத்தில் 67 பள்ளிகளில் இருந்து 426 மாணாக்கரும் மணப்பாறை புனித லூர்தன்னை ஆலயத்தில் 27 பள்ளிகளில் இருந்து 149 மாணாக்கரும் இத்தேர்வில் கலந்து கொண்டனர். 13 ஆம் தேதி திருச்சி நல்லாயன் நிலையத்தில் 59 பள்ளிகளில் இருந்து 585 மாணாக்கரும். மணப்பாறை புனித லூர்தன்னை ஆலயத்தில் 22 பள்ளிகளில் இருந்து 232 மாணாக்கரும் இத்தேர்வில் கலந்துகொண்டனர்.





# தன்னார்வ வேதியர்களுக்கான தவக்கால தயாரிப்பு அருங்கொடை தியானம்

15.02.2026, ஞாயிறு அன்று காலை 9.00 மணி முதல் மதியம் 1:30 மணி வரை பொன்மலையிலுள்ள புனித சிலுவை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தன்னார்வ வேதியர்களுக்கான தவக்காலத் தயாரிப்பு அருங்கொடை தியானம் நடைபெற்றது. முதலில் திருச்செபமாலை செபிக்கப்பட்டு, சகோ. ரோச் அவர்களால் இறைப்புகழ்ச்சி வழிநடத்தப்பட்டது. பின்பு அருள்பணி. ஆல்பர்ட் அவர்கள் இறைச்செய்தி வழங்கினார். தேநீருக்குப் பின்னர் நற்கருணை ஆராதனையும் திருப்பலியும் நடைபெற்றன. அனைவருக்கும் நன்றி தெரிவித்து, உணவு பரிமாறப்பட்டு, தியானம் இனிதே நிறைவடைந்தது. 20 பங்குகளைச் சார்ந்த 72 தன்னார்வ வேதியர்கள் இத்தியானத்தில் பங்கேற்றனர்.






# பாலர் சபை தின விழா

**17.02.2026, செவ்வாய் அன்று மதியம் 2 மணிக்கு திருச்சி நல்லாயன் நிலையத்தில் மறைமாவட்ட பாலர் சபை தின விழா நடைபெற்றது. இந்த நிகழ்வின் தொடக்கத்தில் பாலர் சபை கூட்டம் நடத்தப்பட்டது. பின்பு நடனங்கள், பாலர் சபை அறிக்கைகள் இடம்பெற்றன. தொடர்ந்து இந்த ஆண்டு நடத்தப்பட்ட பாலர் சபைக் கூட்டங்களில் இருந்து ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வினாடி வினா நடைபெற்றது. பின்னர் மன மகிழ்வு விளையாட்டுகளும் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற அனைவருக்கும் பரிசுகள் அளிக்கப்பட்டன. பங்கெடுத்த அனைத்து மாணவர்களுக்கும் பாலர் சபை பேட்ஜ், பாலர் சபை உறுப்பினர் கையேடு ஆகியவை பரிசாக வழங்கப்பட்டன. பங்கெடுத்த அனைத்து வழிகாட்டி ஆசிரியர்களுக்கும் பாலர் சபை பேட்ஜ், பாலர் சபை உறுப்பினர் கையேடு, யூபிலி பை, யூபிலி சிறப்பிதழ் ஆகியவை பரிசாக வழங்கப்பட்டன.**












# பள்ளி ஆசிரியர்களுக்கான தவக்கால தியானம் – திருச்சி

21.02.2026, சனிக்கிழமை அன்று தொடக்க, நடுநிலை, ஆங்கில வழிப் பள்ளி ஆசிரியர்களுக்கும், 28.01.2026, சனிக்கிழமை அன்று உயடநிலை, மேல்நிலைப் பள்ளி ஆசிரியடகளுக்கும், திருச்சி புனித மரியன்னை பேராலயத்தில், தவக்கால தியானம் நடைபெற்றது. 60 பள்ளிகளில் இருந்து 626 ஆசிரியர்கள் தியானத்தில் பங்கேற்று பயனடைந்தனர்.

போக்சோ சட்டம் பற்றிய கருத்துரையை திருமதி. தனசீலி திவ்யநாதன் அவர்களும், தியான உரையை செயலர் அருள்பணி. மரியசூசை அவர்களும் வழங்கினர். தேநீர் இடைவேளையைத் தொடர்ந்து, நற்கருணை ஆராதனை, ஒப்புரவு அருளடையாளம், திருப்பலி ஆகியன நடைபெற்றன. மதிய உணவுடன் தியானம் நிறைவுபெற்றது.






# ஞாயிறு மறைக்கல்வி சிறப்புத் தேர்வு

22.02.2026, ஞாயிறு அன்று திருச்சி நல்லாயன் நிலையம், மணப்பாறை புனித லூர்தன்னை ஆலயம், கீரனூர் புனித ஆரோக்கிய அன்னை ஆலயம் ஆகிய 3 இடங்களில் இக்கல்வியாண்டுக்கான மறைமாவட்ட அளவிலான ஞாயிறு மறைக்கல்வி சிறப்புத் தேர்வு நடைபெற்றது. இதில் புத்தூர் மறைவட்டத்தில் 9 பங்குகளிலிருந்து 45 மாணாக்கரும், கிராப்பட்டி மறைவட்டத்தில் 10 பங்குகளிலிருந்து 50 மாணாக்கரும், பொன்மலை மறைவட்டத்தில் 12 பங்குகளிலிருந்து 60 மாணாக்கரும், கீரனூர் மறைவட்டத்தில் 7 பங்குகளிலிருந்து 34 மாணாக்கரும், மணப்பாறை மறைவட்டத்தில் 8 பங்குகளிலிருந்து 30 மாணாக்கரும் பங்கெடுத்தனர்.







